**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**

KRISHNAGIRI

**Session Case No. 158 of 2022**

Prosecution witness LW14 (PW12) Chief

Solemnly affirmed sworn by **Tr.R.Mohan** Grade–I B.C., on date 12.03.2026 in accordance with provisions with the Act of 1873.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு.அம்பிகாபதி | Father's Name | : | திரு.சின்னராஜ் |
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**Accused present.**

**முதல் விசாரணை:**

நான் தற்போது சாமல்பட்டி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். 2021 வருடம் ஒன்னகரை கிராமத்தில் பணிபுரிந்து வந்தேன் . 22.10.2021 ம் தேதி கல்லாவி காவல் ஆய்வாளர் என்னை மணல் பள்ளம் என்ற இடத்திற்கு வரச்சொன்னார் . நானும் என் உதவியாளர் சக்திவேல் என்பவரும் மதியம் 2.00 மணிக்கு அழைத்தன்பேரில் மதியம் சுமார் 10 நிமிடத்தில் அந்த மணல் பள்ளம் என்ற இடத்திற்கு போய்விட்டோம் . அப்பொழுது அந்த இடத்தில் இராமன் மகன் தம்பிதுரை என்பவரை போலீசார் கைது செய்து வைத்திருந்தார்கள் . ஒரு வாக்குமூலம் வாங்குவதாகவும் அதனால் சாட்சியாக இருக்கும்படி போலீசார் சொன்னார்கள்.

தம்பிதுரை வாக்குமூலம் கொடுத்தார் , காவல் ஆய்வாளர் அதனை பதிவு செய்துக்கொண்டார். அந்த வாக்குமூலத்தில் நானும் , என்னுடைய கிராம உதவியாளர் சக்திவேல் என்பவரும் கையெழுத்து போட்டோம் . அதன்பிறகு தம்பிதுரை என்பவரிடம் இருந்து கையில் போடும் வளையம் ஒன்றை

போலீசார் கைப்பற்றினார்கள். அந்த வளையத்தை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியபோது நானும் , என்னுடைய உதவியாளர் சக்திவேல் என்பவரும் சாட்சியாக கையெழுத்துபோட்டோம். ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான் . அந்த கையெழுத்து மட்டும் **Ex.P.2** ஆகும். கைப்பற்றுதல் மகஜர் **Ex.P.3** ஆகும். அந்த வளையத்தை தம்பிதுரை தன்னுடைய பேன்ட் பாக்கெட்டில் வைத்திருந்ததை எடுத்து போலீசாரிடம் கொடுத்தார், அதனை போலீசார் கைப்பற்றினார்கள் . போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

மணல் பள்ளம் என்ற இடம் நான் அந்த சமயத்தில் பணிபுரிந்த ஒன்னகரை பகுதிக்கு உட்பட்ட பகுதி இல்லை என்றால் சரிதான் . அது பக்கத்து கிராமமாகும். அந்த மணல் பள்ளத்திற்கு தனியாக வி.ஏ.ஓ உள்ளார் என்றால் சரிதான். எனக்கு வி.ஏ.ஓ –விற்கு என்ன அதிகாரங்கள் கடமைகள் உள்ளது என்பது தெரியும் என்றால் சரிதான் . எங்கள் கிராம எல்லையில் இருந்து மற்றொரு கிராம எல்லைக்கு போக வேண்டும் என்றால் எங்கள் மேல் அதிகாரியின் அனுமதி பெற்றுதான் போகவேண்டும் என்றால் சரிதான் . அவ்வாறு அனுமதிப்பெற்றதாக நான் போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை. என் முன்னிலையில் எந்த வளையத்தையும் எதிரி எடுத்துக்கொடுக்கவில்லை என்றும் , நான் போலீசாரின் இருப்பு சாட்சி என்பதால் அவர்களுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது தவறு. ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் ஆகியவை காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் அது தவறு. நான்

அரசு ஊழியர் என்பதால் போலீசாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது தவறு.

**<u>மறுவிசாரணை: இல்லை.</u>**

VASUDEVAN DAMODARAN

Digitally signed by VASUDEVAN DAMODARAN
Date: 2026.03.13 10:19:34 +0530